ஓம்

நற் சிந்தனை 010 - சமய சாரம் 2

தற்காலத்தில் பொதுவாகத் தத்துவம் என்பது ஆங்கிலத்தில் கூறும் "பிலோசபி"யைக் குறிக்கும். சைவசமய தத்துவத்த்தில் இவற்றோடு சேர்ந்து மேலும் நம்பிக்கை வழிபாடு; படைத்தல் காத்தல் அழித்தல் அருளல் மறைத்தல்; மகாபிரளையம்; மனக்கருத்து உள்ளுரு; தந்திரம் மந்திரம்; பிராணன் குண்டலினி; பிறப்பு இறப்பு; யோகம் ஞானம் முக்தி; சத் சித் ஆனந்தம் எனப் பலவும் உள்ளடங்கும்.
இதில் பெருங் குறை யாதெனில்; எம்மொழியிலும் இத்தத்துவங்களைச் சரிவர விவரிக்கவோ விளக்கவோ விளங்கிக்கொள்ளவோ வார்த்தைகள் போதாமை.
உதாரணமாக - தவிற்க முடியாத சில காரணங்களினால் பிரிந்து வாழ்ந்த தாயும் பிள்ளையும்; பல ஆண்டுகளிற்குப் பின் ஒன்று சேரும் பொழுது; பெருகும் இன்பத்திற்கும்; பிந்திச் சென்றாலும் நாடகத்திற்குப் பற்றுச்சீட்டுக் கிடைத்ததும்; பெறும் புளுகத்திற்கும்; உள்ள வித்தியாசத்தை விவரிக்கவே சொற்கள் போதாதிருக்கின்றது. மிகச் சாதாரண உணர்வுக்கே இப்படியெனில்; தாய் பிள்ளை கூடுதல் - ரிக்கற் கிடைத்தல் இவ்வுணர்வுகளின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கணிப்பதே மிகக் கடினமாயின்; அனுபேவ அனுமானங்கள்; சூட்சும நுண் உணர்வுகள்; உள்ளம் உயிர் சீவன் சிவன் பரம்பொருள் இவற்றின் இயல்பு; இணைப்பு; சொற்களாற் தெளிவது எப்படி?

அது மட்டுமல்ல தமிழ் தத்துவ நூல்களிற் சொற்கள் பலவும் புதிராக; நாட்டுப்புற கொச்சைப் பேச்சில்; கூழாம்பிறாண்டியாக இருக்குது என்பர். அதன் காரணங்கள் சில பின் வருமாறு:

1) முதலாவதாக; தமிழ்; பழம் பெரும் மொழியாகையால் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்களும்; ஒரே சொல்லிற்குப் பல பொருட்களும் வழக்கில் வந்துவிட்டன. அதனால் எப்பொருளுக்கு எச்சொல்லை வரையறுத்துறுக்க வேண்டும் என்பது கடினமாகிறது.
2) இரண்டாவதாக; பல பக்தர்கள் சித்தர்கள் ஞானிகள் வெவ்வேறு காலங்களிற்கேற்ப வேறு பட்ட முறைகளைக் கையாண்டுள்ளனர். தம் வழியினர் ஆர்வத்தோடு வழுவாது பின்பற்ற வேண்டும் என்பதற்காக.
3) இன்னும் ஒன்று; இவ்வகைத் தத்துவங்கள் தமிழிற் குரு சீட வழிமுறை பண்டு தொட்டு இன்றுவரை தொடரினும்; முதலில் வடமொழியிற்றான் ஏட்டில் உருவாயின. அதனாற் பின் தமிழ் ஏடுகளில் வரையறுக்கப்படாத மொழிக் கலப்பினாலும் சில சிக்கல்கள் ஏற்பட்டன.

4) கடைசியாக. ஆயின் முக்கியமான ஒரு காரணம்; ஆழ்ந்த தத்துவங்கள் எம் மொழிக்குள்ளுமே அடங்கா. அவை பலவும் குரு தீட்சையாலும்; தெய்வ தரிசனத்தாலும்; தியானத்தாலும்; சித்தத்துற் தெளிவாகும் தாந்தோன்றிகள்.

இவற்றை எல்லாம் கேட்டு நாம் பயந்து ஒதுங்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. ஏனெனில் இப்பொழுது நாம் சும்மா செங்கட்டிகளைக் கிடைக்கும் இடங்களில் எல்லாம் இருந்து பொறுக்கிக் குவிக்குறோம். அதேபோல் கல் மண் சீமந்தையும் சேர்க்கிறோம். காலமும் நியதியும் கூடும் பொழுது அத்திவாரம் இட்டுச் சுவரை எழுப்பி வீடுபுகலாம்.

திரும்பவும் ஒருமுறை சைவ தத்துவ சாரம்:
பரம்பொருள்; சிவசக்தி; பதி பசு பாசம்; ஆணவம் கர்மம் மாயை நாதம் விந்து;
36 காண்டங்கள்; வேடங்கள்; அல்லது சிவ தாண்டவங்கள்.
இச்சாசக்தி; கிரியாசக்தி; ஞானசக்தி
பரம்பொருள் - அஃதே சைவத்தின் முழு முதற் கடவுள் பராசிவம் - அம் மந்திரம் நமசிவாய
தத்துவம் சிவசக்தி - தெய்வம் பராசக்தி - மந்திரம் - சிவாயநம - சிவசக்தி
பதி பசு பாசம் ஆணவம் கர்மம் மாயை நாதம் விந்து - தெய்வம் - கணபதி - அவரே எல்லாவகை இந்துக்களினதும் சமய ஆசார அனுட்டானங்களிலும் முன் நிற்பவர் - அவரே பிள்ளையார்; வினாயகர்; விக்கிநேசுவரர்; ஆனைமுகன் ஆகும் - மந்திரம் -
ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்
இச்சாசக்தி; கிரியாசக்தி; ஞானசக்தி - தெய்வம் - முருகன் - அவரே இம் முச்சக்திகளாம்; வள்ளி தெய்வயானை வேல் எனும் மூன்றொடும் காட்சி தருவது.
அறம் காத்தல்; அதர்மத்தை வென்று தர்மம் நிறுவுதல்; நிலை நாட்டுதல் அவன் அருளால் ஆவன. கந்தன் வேலவன் ஆறுமுகன் கார்திகேயன் எனப் பல பெயருடன் புராணங்களில் வருபவர் - மந்திரம் - நாத ஒலி -
ஓம் சரவணபவ ஓம் சரவணபவ ஓம் சரவணபவ
ஓம் சரவணபவ ஓம் சரவணபவ ஓம் சரவணபவ ஓம்
36 வேடங்களின்; சிவதாண்டவங்களின் சீரைச் செம்மனே உணர்த்துபவர் - குரு ஓம் குருதேவாய நம ஓம்

ஓம்